| | |
|---|---|
| ஜே பிரி | |
| கோ உ | |
| உ.அ | |
| உ.அ. | |
| உ.தொ.அ. | |

கல்லூரிக் கல்வி- திருச்சி-23. பெரியார் ஈ.வெ.ரா.கலைக் கல்லூரியில் பயிலும் மாணவியர்களுக்கென ஓய்வறையுடன் கூடிய மாணவிகள் வசதி மையம் (Student Amenities Centre) அமைக்கும் பணிக்கென 2019-20ஆம் நிதியாண்டில் ரூ.35,28,104/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கி- ஆணைகள்- வெளியிடப்படுகின்றன.

---

உயர்கல்வி(டி)த்துறை

அரசாணை (நிலை) எண். 263 நாள் 15.11.2019

திருவள்ளுவராண்டு 2050
விகாரி வருடம், ஐப்பசி-29
படிக்கப்பட்டவை:

---

கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண். 53406/ஜெ3/2017, நாள்.19.05.2018 மற்றும் 07.06.2019.

---

ஆணை

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், கல்லூரிக் கல்வி இயக்குநர் திருச்சி, பெரியார் ஈ.வெ.ரா. கலைக்கல்லூரியானது 14 இளநிலை பாடப்பிரிவுகள், 13 முதுநிலை பாடப்பிரிவுகள் மற்றும் 12 எம்.ஃபில் மற்றும் பிஎச்டி பாடப்பிரிவுகளைக் கொண்டு இயங்கி வருகிறது என்றும், இதில் அக்கல்லூரியில் தற்போது 4770 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள் என்றும், இதில் குறிப்பாக 1721 மாணவியர்கள் பயின்று வருகின்றனர் என்றும், மேலும், ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் கல்வி பயில வரும் மகளிரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகின்றது என்றும், இக்கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு என தனியே எத்தகைய ஓய்வறையும் இதுநாள் வரையிலும் அமைக்கப்படவில்லை என்றும், மேலும், தொழில்நுட்பக் கல்வி வட்டம், பொதுப்பணித்துறை, தலைமைப் பொறியாளர் அவர்களால் திருச்சி, பெரியார் ஈ.வெ.ரா. கலைக்கல்லூரியில் மாணவிகளுக்கென ஓய்வறை கட்டுவதற்கு ரூ.35.20 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2 எனவே, கல்லூரிக் கல்வி இயக்குநர் திருச்சி-23, பெரியார் ஈ.வெ.ரா. கலைக்கல்லூரியில் பயிலும் மாணவிகளின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு அம்மாணவியர்களுக்காக ஓய்வறை அமைப்பதற்கு ரூ.35.20 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்குமாறு அரசிடம் கோரியுள்ளார்.

3. கல்லூரிக்கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, திருச்சி-23, பெரியார் ஈ.வெ.ரா. கலைக்கல்லூரியில் பயிலும் மாணவியர்களுக்கென ஓய்வறையுடன் கூடிய மாணவிகள் வசதி மையம் (Student Amenities Centre) அமைக்கும் பணிக்கென 2019-20-ஆம் நிதியாண்டில் ரூ.35,28,104/-க்கு (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து

இருபத்தெட்டாயிரத்து நானூற்று நான்கு மட்டும்) (விளம்பரம், [illegible] மற்றும் மண்பரிசோதனை கட்டணங்கள் — ரூ.60,000/- , எதிர்பாராத செலவினங்கள்— ரூ.31,015/-- உட்பட) நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4202 கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு– 01 பொதுக்கல்வி –203 பல்கலைக் கழக கல்வியும், உயர்கல்வியும் – மாநிலச் செலவினங்கள்– JB கட்டடங்கள் – தொழில்நுட்பக்கல்வி பிரிவால் நிருவகிக்கப்படுபவை –416 பெரும்பணிகள்–01 பெரும்பணிகள்
(த.தொ.கு. 4202 – 01– 203 – JB – 41601)"
(Old DPC 4202 01 203 JB 1603)

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு "புதுத்துணைப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொ. I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு எதிர்பாராச்செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி விதிகள், 1963–ன் இணைப்பில் உள்ள படிவம் "அ"வின் படி இவ்வரசாணையுடன் நிதித் (வ.செ.பொ. I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2019–20ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதித் (வ.செ.பொ.I) துறைக்கு அனுப்புமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு எண். 54382/கல்வி–I/2019. நாள் 11.11.2019 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 2080 (இரண்டாயிரத்து எண்பது) பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத்ராம் சர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
முதல்வர்,பெரியார் ஈ.வெரா. கலைக்கல்லூரி, திருச்சி–23. (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை–25.
மாநிலக் கணக்காயர், சென்னை–18
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35
சம்பந்தப்பட்ட கருவூல கணக்கு அலுவலர்.

**Collegiate Education Trichy-23,Periyar E.V.R College Student Amenities Center for female students construction work for the fiscal year 2019-20-GO released for the sanctioned amount Rs 3528104**

---

**Higher Education department**

**GO NO:263**

**DATE: 15.11.2009**

**Thiruvalluvar year 2050**

Vigari year, ipasi-29

As read

---

Ref. no :53406/J3/2017. Director of Collegiate Education. Dated 19.05.2018 & 07.06.2019

---

ORDER:

1. We come to know from the above read letter, Periyar E.V.R Trichy . The Director of Collegiate Education has stated that 14 UG courses and 13 PG courses and 12 M.Phil and PhD courses are functioning in this college. At present 4770 boys and girls are studying in this college. And about 1721 girl students are studying and for them there is no separate restroom so far. Further we have received from the senior engineer PWD that already 35.20 lakh rupees project appraisal has been received.

2. So the Director of Collegiate Education Trichy-23, Periyar E.V.R College is asked to get the sanction amount of rupees 35.20lakhs from the Government.

3. So that the Government should go through the recommendations give by the Director of Collegiate Education and sanction the amount of rupees 3528104 (thirty five lakh twenty eight thousand and

one hundred and four rupees only). In addition rupees 60000 to be sanctioned for advertisements, fire safety and soil testing. And Miscellaneous Expenditure rupees 31015 has to be sanctioned.

4. Further as mentioned in para 3 the grants has to be sanctioned under the heads given below

"4202 for education and competition sports, arts and cultural expenditure-01 general education-203 university education, higher education and district expenditure-J.B payment technical education division-416 high work-01(old DPC 4202 01 203 JB 1603)

5. Further as mentioned in the para 3 the sanctioned amount is a new expenditure and it is expecting the approval from the legislative assembly. And this has to be included in supplementary grants for the year 2019-20.
6. This GO for financial grant A.S.K no: 54382/edu-1/2019 dated 11.11.2019 and additional grants no: 2080(two thousand and eighty only) has been released with the approval.

(Order of the Governor)

Mangathram Sharma

Chief Secretary to Government

TO:

Director of Collegiate Education Chennai-06

Principal , Periyar E.V.R College Trichy-23 (thro Director of Collegiate Education)

Chief Engineer PWD, technical education zone ,Chennai-25

District Accountant Chennai-18

Salary division officer Chennai -35

To the concerned Treasury Officer

From To

# CHARGE PAPER

On this 12.8.2021 we have handed over and taken over the Construction of Student's Amenities Centre building in Periyar EVR College, Trichy-23. Estimate Rs. 35,28,104 /-

Administrative sanction : G.O Ms.No:263 Higher Education (D1) Department dated: 15.11.2019

| | | | |
|---|---|---|---|
| 1. | Area of the Building | : | **G.F : 131.10 Sq.m** |
| 2 | No. of rooms – | : | Toilet block -1<br>Girls retiring room-1 |

**Handed over**

S. [signature] 12/8/21

Assistant Engineer, PWD
Technical Education Section
Sethurapatti, Surangudi,
Trichy - 620 012.

**Taken over**

[signature] 12/8/2021

PRINCIPAL
PERIYAR E.V.R.COLLEGE
TIRUCHIRAPPALLI - 620 023
D.O.CODE CI.102